அதற்கு வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், கண்டிப்பாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

நெல் கொள்முதல் நிலையம்

***52049—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, மரத்துறை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, மரத்துறை கிராமத்தின் அருகில் இருக்கின்ற 4 கிராமங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 2,661 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் மரத்துறை பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கோ அல்லது எங்கள் துறைக்கோ கோரிக்கை ஏதும் வரவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

2020 ஜனவரி 8]

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்கள் ஈரோட்டுச் சிங்கம் தந்தை பெரியார், காஞ்சி தந்த தலைவன் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர், மூதறிஞர் கலைஞர் ஆவர். நின்ற தேர்தல்கள் அனைத்திலும் வென்று காட்டிய உலக சாதனையாளர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வழித் தொண்டனாக விளங்குகிற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் திராவிட இயக்கத்தின் கையிருப்பு, கழகத்தின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில், 1984—க்குப் பிறகு ஆளுங்கட்சியை எதிர்த்து, எதிர்க்கட்சி வென்றது என்ற வரலாற்றை உருவாக்கிய எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அரும்பாடுபட்ட இளைஞர் அணியினுடைய செயலாளர், எங்களின் வழிகாட்டி இளைய சூரியன் திரு. உதயநிதி அவர்களுக்கும் இந்தச் சபையில் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, மரத்துறை ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கத்திலேயே அந்தப் பகுதியைச் சுற்றி நான்கு ஊர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்ற காரணத்தினால், அதற்கான வாய்ப்பு எழவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொன்ன 4 ஊர்களும், திருமங்கைச்சேரி ஊராட்சியில், சோழியவிளாகம், நெய்குப்பை ஊராட்சியில், நெய்குப்பை, நெய்குன்னம் ஊராட்சியில் நெய்குன்னம், பந்தநல்லூர் ஊராட்சியில் பந்தநல்லூர் என்று சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்தான். எனவே, 3 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பயணித்து, விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை, அதுவும் மழைக் காலங்களில், ஈரப்பதத்தோடு விற்பனை செய்யும்போது ஏற்படும் இன்னலை, துயரத்தைக் கருதி, மரத்துறை ஊராட்சியிலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

"உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்."

எனவே விவசாயிகளுக்குப்பின்தான் நாம். இன்னும் சொல்லப்போனால், கோரிக்கை வைத்த கைகள் விலகும் முன்னே அதை நிறைவேற்றுகின்ற அரசு என்று இவ்வரசு சொல்கின்றது. அந்தத் தொகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க இடம் இருக்கின்றது, Loadmen–தொழிலாளர்கள் இருக்கின்றார்கள், தேவைப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட நிதி தருவேன் என்று பொது மக்களிடம் கூறியிருக்கின்றேன். ஆகவே, இல்லை என்ற வார்த்தையை எடுத்துவிட்டு 'தருவேன்' என்ற வார்த்தையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்குட்பட்ட மரத்துறை ஊராட்சியில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் அவசியம் வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நான்கு கிராமங்களும், கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டருக்கு அருகில்தான் இருக்கின்றன. டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அது தஞ்சாவூர் மாவட்டமாக இருந்தாலும் சரி, திருவாரூர் மாவட்டமாக இருந்தாலும் சரி, நாகப்பட்டினம் மாவட்டமாக இருந்தாலும் சரி, எந்தெந்த இடத்தில் எல்லாம் தேவைப்படுகின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, உடனடியாக அதற்குரிய கட்டடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். 40 சென்ட் நிலத்தை அங்கே அடையாளப்படுத்திக் காட்டினால், அது புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி அல்லது விவசாயிகள் தானமாகக் கொடுக்க முன்வந்தாலும் சரி, Civil Supplies Corporation தனது சொந்த செலவிலேயே உடனே கட்டடம் கட்டிக் கொடுத்து விவசாயிகளின் நலனைக் காக்கும் என மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில், மரத்துறை ஊராட்சியிலேயே ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். தேவையின் அடிப்படையில், அந்தப் பகுதியின் விளைச்சலின் அடிப்படையில், ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கையினை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒரு தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பிட்ட கை விலகுவதற்கு முன்னால், வரம் கொடுப்பதைப்போல், இந்த அரசு கோரிக்கை வைத்தவுடனே நிறைவேற்றுகின்ற அரசு என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) 2018–2019 பருவத்தில், 1,766 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, கிட்டத்தட்ட 19,10,665 மெட்ரிக் டன் நெல்லை நம்முடைய பகுதியிலிருந்து கொள்முதல் செய்திருக்கின்றது. இதில் அதிகபட்சமாக 15 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேலே டெல்டா பகுதிகளில் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக 3,487 கோடி ரூபாய் ECS மூலம் பணம் வழங்கப்பட்டிருக்கிறது; 5,06,821 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதனையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இந்தக் கொள்முதல் பருவத்தில் தேவையான இடங்களில் எல்லாம், திருவிடைமருதூர் பகுதியாக இருந்தாலும், உறுப்பினர் சொல்வதுபோல் என்னுடைய தொகுதிக்கு அருகில் உள்ள கிராமமாக இருந்தாலும், இந்தப் பகுதியின் தேவையை அறிந்து, உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை உரிய பரிசீலனை செய்து, கவனிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை, தனியார்களிடம்

இல்லாமல்,நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்திட, 300—க்கும் மேற்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை உருவாக்கி, விவசாயிகளைக் காத்த தலைவர், கழகத் தலைவர் கலைஞர்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இப்போது நெல்லை மட்டும்தான் விற்பனை செய்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம். ஆனால், பயறு, உளுந்து, பருத்தி, எள் போன்றவை, சோழ மண்டலத்தில், குறிப்பாக,தஞ்சைமாவட்டத்தில்உற்பத்திசெய்யப்படுபவை.இவற்றை விற்க வேண்டுமானால் அவர்கள் நகரங்களுக்குச் சென்றுதான், அங்கே இருக்கிற கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சோழ மண்டலத்தில், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தை மனதில் நிறுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலேயே பயறு, உளுந்து, பருத்தி, எள் ஆகியவற்றை விற்பனை செய்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், உற்பத்தி செய்து விற்கிற நெல்லில் உள்ள ஈரம் உலர வேண்டும் என்பதற்காக கடந்த காலங்களில் கழக அரசு உலர்களம் அமைத்துத் தந்தது. இப்போது 8 ஆண்டுகளில் எனக்குத் தெரிந்து தஞ்சை மாவட்டத்தில் உலர் களம் என்ற ஒரு பெயரே தெரியாத அளவிற்குப் போய்விட்டது. எனவே, மழைக் காலங்களில் உலர்ந்த நெல்லை அரசு வாங்குவதற்கு வசதியாக உலர்களம் அமைத்துத்தர வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு, திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் நிலையான கட்டடம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில், விவசாயிகளை மிகப் பெரிய அளவிலே பாதுகாத்த தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை ஊர் அறியும்; விவசாயிகளும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பெல்லாம், levy கொள்முதல், இணை கொள்முதல், ஏகபோக கொள்முதல்—இதுதான் கொள்முதலில் இருந்து வந்த நடைமுறை. இந்த நடைமுறையை மாற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1—10—2002—ல் ஓர் ஒப்பந்தத்தைப் போடுகிறார்கள். அதன்மூலம்தான் இந்த Decentralised Procurement (DCP) என்கிற இந்தக் கொள்முதலை அறிமுகம் செய்கிறார்கள்.

2020 ஜனவரி 8]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு போட்ட அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான், இந்தக் கொள்முதல் நடைமுறையை, தொடர்ந்து வந்த அனைத்து அரசுகளும் கடைபிடித்து வருகின்றன. இந்த முறையின்மூலம் விவசாயிகள் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறார்கள். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிற நெல்லாக இருந்தாலும் சரி, மற்ற தானியங்களாக இருந்தாலும் சரி; அதற்குரிய விலை கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பயறு, உளுந்து, எள் ஆகியவற்றைப் பொறுத்தவரை, சென்ற ஆண்டிலிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலேயே அவர்கள் விற்பனை செய்யலாம் என்று உத்தரவிட்டு, அதற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் தேவையான இடங்களில் எங்கேயெல்லாம் நிரந்தரக் கட்டடம் தேவை என்று விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றார்களோ, அங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்துவதோடு, permanent building*–ஐ கட்டிக் கொடுக்கிறோம், அதேபோல, அதற்குரிய களத்தையும் அமைத்துக் கொடுக்கிறோம். களத்தோடு சேர்த்து, 40 சென்ட் நிலத்தில் கட்டடத்தையும் அரசு கட்டிக் கொடுக்கிறது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு களத்தையும் அமைத்துக் கொடுக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதலை அரசு செய்தால்தான் விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்கும். ஏனென்றால், எங்கள் பகுதியில் இப்போது அரசு கொள்முதல் செய்யாததால், எங்கள் ஊர் பக்கமெல்லாம் வியாபாரிகள் நூறு ரூபாய் குறைவாகத்தான் நெல்லை வாங்குகிறார்கள். ஆகவே, அரசே நெல்லை கொள்முதல் செய்தால்தான், விவசாயிகள் பயன்பெறுவார்கள். ஆனால், இந்த அரசு என்ன செய்கிறது என்று கேட்டால், தஞ்சை மாவட்டத்தில்*

மட்டும்தான் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் கொள்முதலைச் செய்கிறது. எங்கள் பகுதியிலும் அதிகளவில் நெல் விளைகிறது. எங்கள் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் கொள்முதல் செய்யாததால், இந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள், குறைந்த விலையில், தனிப்பட்ட வியாபாரிகளுக்கு நெல்லைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும் நெல்லை கொள்முதல் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா எனக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். டெல்டா மாவட்டங்களில் நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில், எங்கெல்லாம் நெல் வரத்து இருக்கிறதோ, விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கிறதோ, அந்த இடங்களிலெல்லாம், டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில், அந்தப் பகுதிகளில், டெல்டா அல்லாத மாவட்டங்களில், 38 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவையெனக் கேட்கிறார்களோ, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 8]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதி அதிகமாக விவசாயம் செய்யப்படும் பகுதியாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, அச்சன்புதூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அங்குள்ள விவசாயிகள் பன்னெடுங்காலமாக வலியுறுத்தி வருகின்றார்கள். தற்போது அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளெல்லாம் வெகு தூரத்திற்குச் சென்றுதான் தங்களது விளைபொருட்களை விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் சங்கத்தின் நிருவாகிகள் அங்கே நெல் கொள்முதல் நிலையம் அமைக்க இடம் இருப்பதாகவும், அச்சன்புதூர் பகுதியில் ஒரு நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்றும் வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, அந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமாய்த் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், விவசாயிகளுடைய நலன் காக்கிற ஓர் அரசாக இருக்கிறது.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்தார்கள். எல்லாக் காலங்களிலும் விவசாயிகள் விளைவிக்கிற நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். அதனடிப்படையில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையை மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறது. சன்ன இரகத்திற்கு ரூ.70/—ம், சாதாரண இரகத்திற்கு ரூ.50/—ம், என்ற அளவில் ஊக்கத் தொகையும் வழங்கிக் கொண்டிருக்கிற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. கடந்த 8½ ஆண்டுகளில் மட்டும் இதுவரை 718 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு

ஊக்கத்தொகையாக மட்டும் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் நலன் கருதி, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருவள்ளூர் மாவட்டம், விவசாயிகள் அதிகம் இருக்கக்கூடிய மாவட்டம். அதிலும் குறிப்பாக, திருவள்ளூர் தொகுதி, விவசாய நிலங்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சட்டமன்றத் தொகுதியாகும். அங்கு நெல் கொள்முதல் மையம் ஒன்றை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

கால்நடை மருந்தகம்

***6058—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—